முருகப்பெருமான் துணை

**மகான் ஜனகமகரிஷி அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

01.07.2023, சனிக்கிழமை

1. மாதவ ஞானியே அரங்கா
   மக்களுக்கு மரணமிலாப் பெருவாழ்வு
   பூதலத்தில் அருள வந்த
   புகழ்மிக்க ஞான தேசிகனே
2. தேசிகனே உன் பெருமை கூறி
   தெரிவிப்பேன் அறிவுரை ஆசி
   ஆசியதும் சோபகிருது மிதுனதிங்கள்
   அறிவிக்க மூவையோர் திகதி காரிவாரம்
   (சோபகிருது வருடம் ஆனி மாதம் 16 ம் நாள், 01.07.2023, சனிக்கிழமை)
3. வாரமதில் ஜனகமகரிஷி யானும்
   வழங்குவேன் உலக நலமுற
   சோரமின்றி தரும ஞான வழி
   சுருதிபடி காட்டுகின்ற அரங்கன்
4. அரங்கன் திருவடி பற்றி
   அறிவிப்பேன் உலக மக்கள்
   வரங்களென தொடர்ந்துவர
   வணங்கித் தரும சேவை
5. சேவை ஆற்றி வருக
   சுப்பிரமண்யர் ஞானமாக
   அவதார ஞானி அருளுகின்ற
   ஆறுமுகனார் சோதி வழிபாடு தன்னை
6. தன்னை சரவண சோதியாக
   தரணியோர் சகலரும் வணங்கி
   நன்னயமாய் நித்ய பூசைகளும்
   நாட்டிட செய்து வணங்க

7. வணங்க ஞானிகளின் ஆசி
வரமாகக் கிட்டி இனிதே
இணங்கி ஆறுமுகப்பெருமான்
இறங்கி அருள் செய்யும் பாக்கியம்
8. பாக்கியம் கிட்டி உலகோர்
பாடிடுவேன் ஞானிகளாவர்
தேக்கமின்றி ஞானவான்களாக
தெய்வபலமிக்க தருமவான்களாக
9. ஆகவே அனைவரும் சிறந்து
அறிவிப்பேன் கலியுகம் காக்கும்
வகையான ஞானப்படைகளாக
வரம் தரும் மகா சக்திகளாக
10. ஆகவே ஆற்றல் பெருகி
அகிலத்தை மாற்றுகின்ற
மகத்துவம் கொண்ட தலைமை
மண்ணுலகில் அமைத்து சிறப்பர்
11. சிறப்பான ஞான ஆட்சி
சித்திமிகு தரும ஆட்சி
மறுப்பின்றி உலகில் படைத்து
மண்ணுலகம் காத்து நிற்பர்
அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—